<u>நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொறுப்பு), திருநெல்வேலி மண்டலம்,</u>
<u>திருநெல்வேலி அவர்களின் நடவடிக்கைகள்</u>
பிறப்பிப்பவர் : திருமதி ஆ. மணிமேகலை, B.E.,

ந.க. எண் 1328/2019 திலிம 3 நாள் 13.06.2019

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவுகள் / மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 - திருநெல்வேலி மண்டலம் - தூத்துக்குடி மாவட்டம்- கோவில்பட்டி வட்டம் - அய்யனேரி ஊராட்சி - அய்யனேரி கிராமம் - சர்வே எண் 105/4-ல் 6950.00 ச.மீ (1.72 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

படிக்க :

1. அரசாணை எண் 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் 04.05.2017.
2. அரசாணை எண் 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் 13.10.2017
3. அரசாணை எண் 55, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 02.05.2018
4. அரசாணை எண் 21, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (UD4(3)) துறை, நாள் 05.02.2019
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 13193/17 எல் ஏ 2, நாள் 30.10.2017, 31.10.2017, 03.11.2017, 07.11.2017, 17.11.2017, 20.12.2017 மற்றும் 07.01.2019
6. மனுதாரர் திரு செல்வராஜ் என்பவரது விண்ணப்பம் நாள் 25.03.2019

---

**ஆணை**

பார்வை 1, 2, 3 மற்றும் 4-ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 5-ல் கண்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படியும், பார்வை 6-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், அய்யனேரி ஊராட்சி, அய்யனேரி கிராமம், சர்வே எண் 105/4-ல் 6950.00 ச.மீ (1.72 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ (மு)/ம.(திலி) எண் 125/2019** என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | - 6950.00 சமீ (1.72 ஏக்கர்) |
| மனைகளின் மொத்த எண்ணிக்கை | - 42 (1 to 3, 3A, 4 to 41) |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | - 3 |
| விற்கப்பட்ட மனை எண்கள் | - 6, 12, 33 |

Page No - 48

| | |
|---|---|
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | - 39 |
| விற்கப்படாத மனை எண்கள் | - 1 to 3, 3A, 4, 5, 7 to 11, 13 to 32, 34 to 41 |
| விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு | - 5015.81 சமீ |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு | - 505.80 சமீ (10.08%) |

பூங்கா பரப்பு - 505.80 சமீ (மனை எண் 9, 10, 23, 24)

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்**

1. **பரிசீலனைக்கட்டணம்**

| | | |
|---|---|---|
| இணைய தளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம் பரிசீலனைக்கட்டணம் செலுத்திய மனை எண்களின் விபரம் | : | மனை எண் 1 to 3, 3A, 4, 5, 7 to 11, 13 to 32, 34 to 41 ரூ.19500/- |

பரிசீலனைக்கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, பைபாஸ்ரோடு கிளை, திருநெல்வேலி இவ்வலுவலக வங்கி கணக்கு எண் 10481947367-ல் செலுத்தப்பட வேண்டும்.

2. **வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சிக்கட்டணம்**

பார்வை 4-ல் கண்டுள்ள அரசாணையின் படி வரன்முறைப்படுத்தும் கட்டணமும் மற்றும் வளர்ச்சிக்கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் கீழ்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

**அ. வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத்தலைப்பு**

0217 Urban Development – 60 Other Urban Development Scheme-800.Other receipts AT Receipts under Regularisation charges of Unapproved layout and Plots –DTCP
27 Non Taxation Fees – 30 Regularisation
(DPC 0217 60 800 AT 2730)

**ஆ. வளர்ச்சிக்கட்டணம் கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக்கணக்கில் நேரில் செலுத்தலாம்.**
வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண் ---------------------------

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னர் சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை 1 மற்றும் 2-ல் சுட்டிய அரசாணைகளின் படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

அரசாணை (நிலை) எண் 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள் 13.10.2017-ல் விதி எண் 7(g)(ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
திருநெல்வேலி - 5.

13/06/19

13.6.19

இணைப்பு
மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்

பெறுநர்
வட்டார வளர்ச்சி அலுவலர்
குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம்
திருநெல்வேலி மாவட்டம்

நகல்
1. திரு செல்வராஜ், 4-212, ஆர்.கே. நகர், ஜி.வி.என். கல்லூரி, அப்பனேரி, கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் - 628 502 (செயலாணை மட்டும்)
2. உதவி இயக்குநர், நில அளவை மற்றும் பதிவுருக்கள் துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், தூத்துக்குடி மாவட்டம் (சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு)
3. சார்பதிவாளர், கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் (சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு)
4. செயலாளர் (திட்டம்), தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம் (TNRERA), 1ஏ, காந்தி இர்வின் பாலம் ரோடு முதல் தளம், எழும்பூர், சென்னை
5. தொழில் நுட்ப வைப்பறை

குருவிகுளம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை :திரு.அ.ஜெயராமன்,எம்.காம்.,

ந.க.எண்:ஆ6/1010/2019 நாள்: 25.11.2019

**பொருள் :** மனை வரன்முறை - தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம் - அய்யனேரி ஊராட்சி / கிராமம் சர்வே எண். 105/4-ல் உள்ள மனை எண்கள் : 1 முதல் 3 வரை, 3A, 4, 5, 7 முதல் 11 வரை, 13 முதல் 32 வரை, 34 முதல் 41 வரை உள்ள மனைகள் வரன்முறைப்படுத்தி உத்திரவிடல்.

**பார்வை :** 1.அரசாணை (நிலை) எண்.78 மற்றும் 172 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 04.05.2017, 13.10.2017 மற்றும் 02.05.2018.
2.துணை இயக்குநர்(பொ) நகர் ஊரமைப்புதுறை திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.1328/2018 திலி ம3 நாள்: 13.06.2019.
3.திரு.ரெ.செல்வராஜ், த/பெ.திரு.ரெங்கசாமி, 4/212 ஆர்.கே.நகர், அப்பனேரி, கோவில்பட்டி என்பவரின் விண்ணப்பம் நாள்: 25.11.2019.

*****

**ஆணை:**

பார்வை 2-ல் கண்ட கடிதத்தின் வழி தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், அய்யனேரி ஊராட்சி / கிராமம் சர்வே எண். 105/4 -ல் அமைந்துள்ள அங்கீகரிக்கப்படாத மனைக்கு கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மேற்கண்ட மனைக்கு கீழ்கண்டவாறு கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

1) கூராய்வு கட்டணம் ரூ.500/- வீதம் 19,500/- இணையதளம் வாயிலாக செலுத்தப்பட்டுள்ளது.

2) வளர்ச்சி கட்டணமாக ரூ.1,12,750/- அய்யனேரி ஊராட்சியில் நாள்: 15.11.2019 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

3) வரன்முறை கட்டணமாக ரூ.1,12,750/- தேதி : 15.11.2019 மற்றும் ரூ. 90,201/- தேதி : 19.11.2019 பாரத மாநில வங்கி கோவில்பட்டி கிளையில் உரிய தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

உரிய கட்டணங்கள் அனைத்தும் செலுத்தபட்டுவிட்டதால் அய்யனேரி ஊராட்சி / கிராமம் சர்வே எண். 105/4 -ல் அமைந்துள்ள மனை எண்கள் : 1 முதல் 3 வரை, 3A, 4, 5, 7 முதல் 11 வரை, 13 முதல் 32 வரை, 34 முதல் 41 வரை உள்ள மனைகள் வரன்முறைப்படுத்தி உத்தரவிடப்படுகிறது.

மேற்படி மனையில் கட்டிடம் கட்ட தனியாக அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

பார்வை 2-ல் கண்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் இந்த மனைக்கு பொருந்தும்.

25/11/19

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
குருவிகுளம்

25/11/19

**பெறுநர்:**
திரு.ரெ.செல்வராஜ்,
த/பெ.திரு.ரெங்கசாமி,
4/212 ஆர்.கே.நகர், GVN கல்லூரி, அப்பனேரி,கோவில்பட்டி.

**நகல்:**
1.தனி அலுவலர் அய்யனேரி ஊராட்சி.
2.சார்பதிவாளர் கோவில்பட்டி சார்பதிவகம்.
3.ஆ6 இருப்புக் கோப்பு.